தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

பலன் தரும் மரங்கள் - ஏல அறிவிப்பு

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான மூலிகைப்பண்ணைப் பகுதி, வாகை வளாகம், குடியிருப்பு வளாகம் (துணைவேந்தர் இல்லம் தவிர்த்து) ஆகிய பகுதிகளில் உள்ள பலன் தரும் மரங்களின் பலன்களை ஏலம் விடுவதற்கான விலைப்புள்ளி கோரப்படுகிறது. விலைபுள்ளி வந்து சேர வேண்டிய இறுதி நாள் : 05.6.2026 பிற்பகல் 2.00 மணி வரை. விலைப்புள்ளிப் படிவம் மற்றும் ஏலத்திற்கான நிபந்தனைகள் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு www.tamiluniversity.ac.in என்ற இணையதளத்தைப் பார்க்கவும். தொடர்புக்கு: 04362 – 226720.

பதிவாளர்(பொ)

இணைப்பு - 1

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

**பலன் தரும் மரங்கள் - ஏலத்தின் நிபந்தனைகள்**

1. ஏலம் எடுக்க விருப்பமுள்ள ஒவ்வொருவரும் குத்தகை உரிமத்திற்கு முன் வைப்புத் தொகை ரூ.10,000 /- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) அளித்தப் பின்னரே ஏலத்தில் பங்கு பெற அனுமதிக்கப்படுவார்கள். ஏலத்தில் அதிகத் தொகை கேட்பவர்களுக்கே ஏலம் உறுதி செய்யப்படும். அவ்வாறு ஏலம் எடுத்தவர் ஏலம் எடுத்த இடத்திலேயே 50 % சதவீதம் தொகையை உடன் செலுத்த வேண்டும். மீதத் தொகை முழுவதும் ஏலம் உறுதியாக்கம் செய்ததை ஏலதாரர் அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்த நாளிலிருந்து (15) பதினைந்து தினங்களுக்குள் மீதத் தொகையைச் செலுத்தி உரிய முத்திரைத் தாளில் ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால் ஏலம் எடுத்தவருடைய தொகை திரும்பத் தரப்படமாட்டாது. பின்னர் மறு ஏலம் விடப்படும்.
2. மூடிய உறையுடன் கூடிய விலைப்புள்ளி 05.06.2026 அன்று பிற்பகல் 2.00 மணி வரை தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் நேரடியாகவோ /அஞ்சல் வழியாகவோ "**பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்** " என்ற முகவரியில் பெறப்படும். **உறையின் மேல் பலன் தரும் மரங்கள் விலைப்புள்ளிகள் தொடர்பாக** எனக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.
3. ***தமிழ்ப் பல்கலைக்கழக பலன் தரும் மரங்களுக்கான ஏலம் 05.06.2026 மாலை 3.30 மணிக்கு பதிவாளர் அலுவலகத்தில் நடைபெறும்.***
4. ஏலம் எடுக்காதவருடைய வைப்புத் தொகையை ஏலம் முடிந்தவுடன் அந்த இடத்திலேயே திருப்பி அளிக்கப்படும்
5. ஏலதாரரே மரத்திற்கு இரவு, பகல் இரு நேரங்களிலும் உரிய காவலர்களை அமர்த்தி மரத்தின் பலன்களை எவரும் எடுக்காத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். நிருவாகம் இதற்கு பொறுப்பேற்காது. காவலர்களைக் கொண்டு 24 மணி நேரமும் கண்காணிக்க அனுமதி உண்டு.
6. ஏலம் எடுத்தவர் பலன் தரும் மரங்களின் மகசூலை மட்டும் அனுபவிக்க வேண்டும். மரங்களுக்கு எவ்விதத் தீங்கும் விளைவிக்கக் கூடாது. மரங்களின் கிளை போன்றவற்றையும் வெட்டக்கூடாது.
7. பனை மரத்தில் கள் இறக்கக் கூடாது. மட்டைகளை வெட்டக் கூடாது
8. மரங்கள் பட்டுப் போனதாலோ, எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கப்பெறவில்லை என்ற காரணங்களினாலோ எண்ணிக்கை வேறுபாடு இருப்பதாலோ, தனக்கு இழப்பு ஏற்பட்டதென்று உரிமைத் தொகையில் எவ்விதத் தள்ளுபடியும் கேட்க ஏலம் எடுத்தவருக்கு உரிமை கிடையாது.

9. உரிய காலத்திற்குள் மரங்கள் இருக்கும் இடம் பல்கலைக்கழக உபயோகத்திற்கோ மற்ற காரணங்களுக்கோ தேவைப்பட்டால் எவ்வித முன் அறிவிப்புமின்றி மரங்கள் தன் பொறுப்பில் எடுத்துக் கொள்ள பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.
10. பலன் தரும் மரங்களின் விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் / விண்ணப்ப நகலை நிதிப்பிரிவு வழியாக ரூ.446/- + 12% GST (ரூ.500/- மட்டும் GST உட்பட)செலுத்திப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
11. ஏலத்தின் முடிவுகள் மற்றும் விலைப்புள்ளிகளின் முடிவுகள் பதிவாளர் எடுக்கும் முடிவுகளே இறுதியானது.

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் : 04362 226720**

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இனி வரும் காலங்களில் பதிவாளர் அவர்களால் வகுக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலதாரர் கலந்து கொள்ள வேண்டும்.

22/05/2026

பதிவாளர்(பொ)

இணைப்பு - 2

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

பலன் தரும் மரங்கள் - விலைப்புள்ளிகள் விவரம்

| வ. எண் | மரங்களின் விவரம் | மூலிகைப் பண்ணைப் பகுதி | நிருவாகக் கட்டடம் | குடியிருப்பு வளாகம் | மொத்தம் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | புளிய மரம் | 243 (மரத்திற்கு 20 கிலோ) | 123 (மரத்திற்கு 30 கிலோ) | 117 (மரத்திற்கு சுமார் 50 கிலோ) | 483 | |
| 2 | இலவ மரம் | 12 | - | - | 12 | |
| 3 | முருங்கை மரம் | 2 | - | - | 2 | |
| 4 | மாமரம் | 7 | - | - | 7 | |
| 5 | சப்போட்டா மரம் | - | - | 8 | 8 | |
| 6 | நெல்லி மரம் | - | 21 | 3989 | 4010 | |
| 7 | நாவல் மரம் | - | - | 1063 | 1063 | |
| 8 | வேம்பு | 935 | - | 402 | 1337 | |
| 9 | பலா மரம் | 1 | 4 | 5 | 10 | |
| 10 | முந்திரி | 1 | 89 | 41 | 131 | |
| 11 | பனைமரம் காய்ப்பு (நொங்கு மட்டும்) | | 30 | 45 | 75 | |
| | மொத்தம் | | | | | |

கூடுதல் தொகை ரூ.______________

(எண்ணாலும், எழுத்தாலும்)

ஏலம் எடுப்பவர் கையொப்பம்

முகவரியுடன்